## காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்

**தமிழ் வருடம் விளம்பி, மாதம் ஆவணி 18ஆம் நாள்**

**ஆங்கில மாதம் செப்டம்பர் 3ம் நாள், 2018 திங்கள் கிழமை**

**இன்றைய குறள்**

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தாருக்கு**
**யாண்டும் இடும்பை இல.**

**பொருள் :**

**விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை எப்போதும் நினைக்கின்றவர்க்கு எப்போதும், எவ்விடத்திலும் துன்பம் இல்லை.**

**பொன் மொழி**

**உலகத்தின் மிகவும் மலிவான பொருள் அன்புதான். மிக விலை உயர்ந்ததும் அதுதான். - இங்கர்சால் -**

**இரண்டொழுக்கப் பண்பாடு**

1. **நான் பயிலும் பள்ளியினையும், வகுப்பறையினையும் எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்வேன்.**
2. **எல்லோரையும் மதித்து நடப்பேன்**

**பழமொழி**

**விருந்தும், மருந்தும் மூன்று நாளைக்கு**

A constant guest is never welcome

**பொது அறிவு**

1. **நமது இந்திய நாட்டின் தேசிய பாரம்பரிய விலங்கு - யானை**
2. **தேசிய நாட்காட்டியின் முதல் மாதம் - சித்திரை**

சௌண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

03.09.2018

## இன்றைய முக்கிய செய்திகள்

1. உத்திர பிரதேச மாநிலத்தில் கனமழையின் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் 16 பேர் பலியாகியுள்ளனர்.
2. பெட்ரோல், டீசல் விலை கடும் உயர்வு. பெட்ரோல் ரூ 82.24க்கும், டீசல் 75.19க்கும் விற்கப்படுகிறது.
3. மதுரை மருத்துவக் கல்லூரியில் ராகிங் செய்த இரண்டாம் ஆண்டு மாணவர்கள் 20 பேர் கல்லூரியிலிருந்து இடைநீக்கம்.
4. காஷ்மீர் மாநிலத்தில் போலீசுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் கண்ணீர் புகை குண்டு வீச்சு.
5. இந்தியா செல்லும் வெளிநாட்டவர் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாக ஐ.நா.தெரிவித்துள்ளது.
6. அடுத்த ஆண்டு முதல் 6 முதல் 8 வகுப்புகளுக்கு சீருடை மாற்றப்பட உள்ளதாக பள்ளிக்கல்வி அமைச்சர் திரு.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.
7. ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா 15 தங்கம், 24 வெள்ளி, 30 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.
8. இந்தியாவிற்கான எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று டெஸ்ட் தொடரை கைப்பற்றியுள்ளது.

சௌண்டேஸ்வரி நர்சரி பள்ளி